[2023 ஏப்ரல் 21

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்- இரண்டாகப் பிரித்தல், உரிய நேரத்தில் கலந்தாய்வு நடத்துதல் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய துணைக் கண்டத்தில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் முதன்மையானது, தரத்தில், தகுதியில், கல்வி ஆராய்ச்சியில், முதல் தரத்தில் உள்ளதுதான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம். பல்வேறு அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும், ஆராய்ச்சியாளர்களையும், கல்வியாளர்களையும் உருவாக்கியது, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம். பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட திரு. எம்.எஸ். சுவாமிநாதன் போன்ற வேளாண்மை விஞ்ஞானிகளை உருவாக்கியது இந்தப் பல்கலைக்கழகம்தான். தற்போது இந்தப் பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரிக்கப் போவதாக செய்திகள் வருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பல்கலைக்கழகத்தை நிர்வாக நலன் கருதி, ஆளுமைத் திறன் கருதி, விவசாயிகளின் நலன் கருதி, பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் பரப்பளவும், பல்வேறு விவசாய ஆராய்ச்சி நிலையங்களைக் கொண்டும், தொடர்ந்து ஆண்டுதோறும் பல்வேறு பயிர் இரகங்களை வெளியிட்டும் விவசாயிகளுக்கு பல்வேறு தொழில்நுட்பங்களை வழங்கியும் வருகின்ற இந்தப் பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். தற்போது, மருத்துவம்,* engineering *போன்ற படிப்புகளுக்கு ...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி, போதுமே, அடுத்ததா?*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ முடித்துவிடுகிறேன். கலந்தாய்வின்போது வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கான கலந்தாய்வையும் நடத்த வேண்டும். கடந்த ஆண்டு ஜூன், ஜூலையில் நடைபெற வேண்டிய கலந்தாய்வு, இந்த வருடம் ஜனவரியில்தான் நடத்தப்பட்டது. இதனால், மாணவர்கள் மத்தியில் பதட்டமும், பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 21] [திரு. எஸ்.பி. வேலுமணி]

அதைப்போல, தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 783 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். (குறுக்கீடு) இருக்கட்டும் போதும், உங்கள் உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். போதும், please ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடு) ஒன்றை மட்டும் சொல்லுங்கள்.

முற்பகல் 10–05

(இ) சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, மிக முக்கியமான பிரச்சினை. கோவை மாவட்டத்திற்கு குடிநீர் ஆதாரமாக இருக்கின்ற சிறுவாணி அணையில் கேரள அரசு அணை கட்டுவதாக நான் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அதேபோல திருமதி வானதி சீனிவாசன் மற்றும் கோவை மாவட்டத்தைச் சார்ந்த மற்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். சிறுவாணி அணைக்கு வரக்கூடிய தண்ணீரைத் தடுத்து கேரள அரசு அணை கட்டிக்கொண்டிருக்கிறது. அதை இந்த அரசு இன்னும் கவனிக்காமல் இருக்கிறது. கிட்டத்தட்ட 90 சதவீதம் கட்டி முடித்துவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசியது போதும். அதைப்பற்றி சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) 90 சதவீதம் கட்டி முடித்துவிட்டார்கள் என்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: இது கோவை மாவட்ட மக்களுடைய முக்கியமான பிரச்சினை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை உடனடியாக ஆய்வு செய்து, அதைத் தடுத்து நிறுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் குடிமக்களுடைய கோரிக்கையை ஏற்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் இருந்தால், சொல்லலாம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடம் இங்கே பதிவு செய்கின்ற பல தகவல்களுக்கான பதில்கள் இல்லாமல் இருக்கலாம் என்ற நோக்கத்திலும், நேரத்தின் அருமை கருதியும் பதில்கள் பிறகு அனுப்பிவைக்கப்படும் என்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல விரும்பினால், தாராளமாகச் சொல்லலாம்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இலாகா சம்பந்தமான பதில் எப்போதுமே என்னிடம் இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Good.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திரு. வேலுமணி அவர்கள் கேள்வியைக் கேட்டுவிட்டு எங்கே போகிறீர்கள்? (குறுக்கீடு) பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு சிறு அணைகளைக் கட்டுகிறார்கள் என்று கூறி, அதற்கான ஒரு* photo*-ஐயும் கொடுத்திருக்கிறார்கள். அது அதற்கான* photo*-தானா அல்லது வேறு ஏதாவது* photo*-வா என்று தெரியவில்லை. அந்தச் செய்தி வந்தவுடனேயே எங்கள் துறையினுடைய* Chief Engineer *தலைமையில் ஒரு* team*-ஐ அங்கு அனுப்பியிருக்கிறோம். இன்றைக்கோ, நாளைய தினமோ எங்களுக்கு முழுமையான விவரம் தெரியவரும். அப்படித் தெரிந்ததற்குப் பிறகு அது உண்மையாக இருக்குமானால், உடனடியாக இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி ஆற்றிலிருந்து சிறுவாணி அணையில் கலக்கும் நீரைப் பற்றித்தானே சொல்கிறீர்கள். (குறுக்கீடு) அந்தத்*

2023 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

தண்ணீர்தான் பவானி ஆற்றிற்கு வந்து பிறகு இங்கு வந்து கலக்கிறது. (குறுக்கீடுகள்) சரி, கொடுத்துவிடுகிறோம்.

(அ) ஒகேனக்கல், காவேரி உபரி நீரை நீரேற்றம் மூலம் ஏரிகளில் நிரப்புதல்–*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கோரியதற்கு, உங்களுக்குத் தேவையான தண்ணீரை ஒன்று மேட்டூர் அணையிலிருந்து எடுக்கலாம் இல்லையென்றால், ஒகேனக்கலிலிருந்து தண்ணீர் எடுக்கலாம்.* Cauvery basin and Thenpennaiyar basin *என்று இரண்டு இருக்கிறது.* Cauvery basin*-லிருந்து 59 ஏரிகளுக்கும்,* Thenpennaiyar basin*-லிருந்து 109 ஏரிகளுக்கும் தண்ணீர் கொடுக்கலாம். ஆனால்,* pump *செய்துதான் தண்ணீர் கொடுக்க முடியும். அவ்வாறு தண்ணீரை* pump *செய்து கொடுப்பதற்கு நாங்கள்* survey *நடத்தியதில், ரூ.1,500 கோடி தேவைப்படுவதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தின் நிதிநிலைமைக்கேற்பதான் அந்தத் திட்டம் எடுக்கப்படும்.*

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்– இரண்டாகப் பிரித்தல், உரிய நேரத்தில் கலந்தாய்வு நடத்துதல் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், பொறியியல் கல்லூரி மற்றும் வேளாண்மைக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை ஒன்றாகச் சேர்த்து செய்ய வேண்டும் என்பது பற்றி குறிப்பிட்டிருந்தார்கள். அதுகுறித்து மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசியிருக்கிறோம். கூடுமானவரையில் ஒரே மாதிரியான* counselling *நடத்தி, வேளாண்மைக் கல்லூரி மாணவர்களும், பொறியியல் கல்லூரி மாணவர்களும் ஒன்றாக கல்லூரிகளில் போய்ச் சேர்கின்ற வகையில் ஏற்பாடு செய்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்ற அடிப்படையில், நானும், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களும் அதிகாரிகளோடு கலந்து பேசிவிட்டு, துணை வேந்தருடன்*

பேசவிருக்கிறோம். சில பணியிடங்கள் காலியாக இருப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அந்த காலிப் பணியிடங்கள் எல்லாம் தற்போது நிரப்பப்பட்டு வருகின்றன. நிச்சயமாக, வெகு விரைவில் அந்தக் காலிப் பணியிடங்களெல்லாம் நிரப்பப்படும்.

(இ) சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவது குறித்து–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கொறடா அவர்கள் ஒரு பிரச்சினையைப் பற்றி இங்கே கேள்வி எழுப்பினார்கள். அதற்கு மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை. கோவை மாவட்ட மக்களுக்குக் குடிநீர் ஆதாரமாக இருக்கின்ற பிரச்சினை. சிறுவாணி அணைக்கு வருகிற தண்ணீரைத் தடுத்து கேரள அரசு தடுப்பணை கட்டிவிட்டால், சிறுவாணி அணைக்குத் தண்ணீர் வராது. அதிலிருந்துதான் கோவை மாவட்ட மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, இதை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, ஆய்வு செய்து, அப்படி ஏதாவது அணை கட்டப்பட்டு வந்தால், அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அங்கிருக்கின்ற தண்ணீர் முழுவதும் சிறுவாணி அணைக்கு வந்து, அங்கிருந்துதான் கோவை மாவட்ட மக்களுடைய குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படுவதால், அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்றும், அதை கவனமாக பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவாணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று கட்டுவதற்கு கேரள அரசு முனைந்திருக்கிறது என்ற செய்தி வெளியாகி, எங்களுக்கும் அந்தச் செய்தி வந்திருக்கிறது. சிறுவாணி ஆற்றில் கோடைக் காலங்களில் தண்ணீர் வந்த சுரங்கப்பாதையையும் கேரள அரசு மூடிவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. அதன் கொள்ளளவு 50 மில்லியன் கன அடியிலிருந்து

2023 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

45 மில்லியன் கன அடியில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற செய்தியும் வந்திருக்கிறது. இதன் காரணமாக பில்லூர் அணைக்கு வரும் நீரின் அளவும் குறையும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதால், அதிகாரிகள் அங்கு சென்று வந்து எனக்கு report *தந்த பிறகு, கேரள அரசோடு இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம் அல்லது அதிகாரிகள் சென்று பேசுவார்கள் அல்லது நானே சென்று பேசிவிட்டு வருவேன்.*

முற்பகல் 10–10

(ஈ) சென்னை-பெங்களூரு சாலை-ஒரகடம் பகுதியில் பாலம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பெங்களூருக்கு 5 மணி நேரத்தில் செல்வதற்கு நம்மிடத்தில் சாலை வசதி இருக்கிறது. ஆனால், ஸ்ரீபெரும்புதூர்* junction *வரும்போது ஏறக்குறைய 40 நிமிட நேரம் வீணடிக்கப்படுகிறது. காரணம் என்னவென்றால், அங்கே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளின் கனரக வாகனங்கள், இலகுரக வாகனங்கள் அனைத்தும் செல்வதால், அங்கு ஒரு மணி நேரம் நின்று செல்லவேண்டிய அளவிற்கு மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதுகுறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன். அவர் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துவிட்டேன், போதும். நேரமில்லை.* please. *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் இருந்தால், சொல்லுங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கு இன்று பிறந்தநாள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக அவருக்கு வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 21

உறுப்பினர் கேட்கின்ற அந்தச் சாலை, மாநில நெடுஞ்சாலை சம்பந்தப்பட்டது அல்ல. குறிப்பாக, இது முழுக்க முழுக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் போடப்படுகின்ற சாலை, ஒன்று. இன்னொன்று, பக்கத்தில் ஒரகடம் போகின்ற சாலையானது, மாநில அரசாங்கத்தின் சாலை. எனவே, இப்போது வெளிவட்ட சாலை ஒன்று புதிதாக போடுவதற்காக திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டு, உலக வங்கியின் நிதியுதவியோடு போடப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, ஒரகடம் பகுதியில் மாநில அரசின் சார்பாக நீங்கள் கேட்கின்ற பாலம் அமைக்கப்படும்.

(இ) சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவது குறித்து–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, சற்றுமுன் வந்த செய்தி. 60 மில்லியன் கன அடியிலிருந்து 70 மில்லியன் கன அடி வரைக்கும் தண்ணீரைத் தேக்கக்கூடிய அளவிற்கு கட்டியிருக்கிறார்கள். இதுகுறித்து நம்முடைய அதிகாரிகள் ஆய்வு செய்திருக்கிறார்கள். கேரள அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். எனவே, இரண்டு மாநிலங்களையும் கூட்டு கள ஆய்வு செய்து, பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள்.*

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்– இரண்டாகப் பிரித்தல், உரிய நேரத்தில் கலந்தாய்வு நடத்துதல் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர், உறுப்பினர் அவர்கள் வேளாண் கல்லூரியில் பணியிடங்கள் காலியாக உள்ளதென்று கூறினார்கள். கடந்த 2014–ல்*

2023 ஏப்ரல் 21] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

உதவிப் பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அதன் பின்னர் 10 ஆண்டு காலமாக இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை. கிட்டத்தட்ட 792 பணியிடங்கள் காலியாக உள்ளன. 10 ஆண்டு கால பிரச்சினை. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சென்றிருக்கிறது. அது விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. நன்றி.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *அதேபோல பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் நோக்கம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்காலத்தில் அது நிதிநிலைமைக்கேற்ப நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(உ) கடலூர் மாவட்டம், வீராணம்-பாளையங்கோட்டை விவசாயப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குள் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். ஒரு நிமிடம்தான், ஒரு நிமிடத்தில் பதிவு செய்யுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முப்போகம் விளைகின்ற கடலூர் மாவட்டத்தின் நிலங்களை, குறிப்பாக வீராணம் மேற்குப் பகுதி விவசாய நிலத்தையும், திருமுட்டம் பகுதியில் இருக்கின்ற பாளையங்கோட்டை விவசாய நிலத்தையும் ஒன்றிய அரசு, தமிழக அரசோடு கலந்தாலோசிக்காமல் ஏலம் விடுவதற்கு முயற்சித்ததை, 24 மணி நேரத்திற்குள் தனது ஆளுமையான அணுகுமுறையால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.*

அந்தப் பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்கின்ற வரையறைக்குள் கொண்டு வருவதன்மூலம் எங்களுக்கு ஒரு நிரந்தர பாதுகாப்பும், நிம்மதியும் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.